**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை – ஆகஸ்ட் – 2023**
**A061 நாட்டுப்புறவியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாட்டார் வழக்காறு என்ற சொல்லை பயன்படுத்திய ஆய்வறிஞர் யார்?
2. நாட்டுப்புறக் கலை வகைமைகளுள் இரண்டினைக் கூறுக.
3. புராணக் கதைப்பாடல்களுக்கு ஆதார நூல்கள் எவை?
4. தால் – என்பதன் பொருள் யாது?
5. நிகழ்த்துக் கலைகள் இரண்டினை எழுதுக.
6. கண்ணேறுக்கு வழங்க பெறும் வேறு பெயர்கள் எவை?
7. தமிழகத்தின் எல்லையாகத் தொல்காப்பியர் கூறுவனவற்றை எழுதுக.
8. பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் யார்?
9. சிறுவர் விளையாட்டு இரண்டினைக் கூறுக.
10. வீணை தயாரிக்கும் ஊர் யாது?
11. சித்திரைத் திருவிழா நடைபெறும் ஊர் எது?
12. விடுகதைக்கு வழங்க பெறும் வேறு பெயர்கள் யாது?
13. நாட்டுப்புற மருத்துவத்தில் இருந்து வளர்ந்த மருத்துவத்தின் பெயர் என்ன?
14. வளமை சடங்கின் வேறு பெயர் யாது?
15. 'Folklore' – தமிழாக்கம் தருக.

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. நாட்டுப்புற இலக்கியம் என்றால் என்ன?
2. காது குத்துதல் சடங்கு பற்றி எழுதுக.
3. வளமை சடங்கு என்றால் என்ன?
4. பாய் பின்னுதல் – குறிப்பு வரைக.
5. முளைப்பாரி என்றால் என்ன?
6. கூத்தின் வகைகளை எழுதுக.
7. கதைப்பாடல்களின் இயல்புகள் யாவை?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) நாட்டுப்புறக் கலைகள் குறித்துக் கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் குறித்து விவரி.

2. (அ) சிறார் விளையாட்டுகள் குறித்துச் சான்றுடன் விளக்குக.

   (அல்லது)

   (ஆ) நாட்டுப்புறப் பாடல்கள் குறித்து விவரி.

3. (அ) சடங்கின் தோற்றம் வளர்ச்சி நிறுவுக.

   (அல்லது)

   (ஆ) நாட்டுப்புற மருத்துவத்தின் நன்மை குறித்து நீவிர் அறிவன யாவை?

***